# 62

# கிறிஸ்துவுடன் ஆளுகை செய்தல்

## (20:4-6)

*வேதாகமத்தில் மிகவும் விவாதத்திற்குரிய புத்தகத்தில் மிகவும் விவாதத்திற்குரிய அதிகாரத்தின் மிகவும் விவாதத்திற்குரிய பகுதிக்கு நாம் வந்து சேர்ந்துள்ளோம்: இது, வெளிப்படுத்தின விசேஷத்தின் 20ம் அதிகாரத்தின் 4முதல் 6வரையுள்ள வசனங்களாகும். 20:1-3ல், சாத்தான் ஆயிரம் ஆண்டுகளுக்குக் கட்டப்பட்டிருந்தான் என்று நாம் அறிந்தோம். இப்போது நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:*

> *அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதன் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் (வசனங்கள் 4-6).*

*1முதல் 6வரையுள்ள வசனங்கள் பற்றி நீங்கள் கேள்விப்பட்டுள்ள அல்லது வாசித்துள்ள யூகத்தைச் சற்றுநேரம் மறந்து, பரிசுத்த ஆவியானவரால் தரவழைக்கப்பட்ட நேர்மாறின்மீது கவனம் செலுத் துங்கள்: சாத்தான் ஆயிரம் ஆண்டுகள் அளவாகக் கட்டப்பட்டிருந்தான், அதே வேளையில் வேதசாட்சிகளாக மரித்தவர்கள் ஆயிரம் ஆண்டுகள் அளவாக ஆளுகை செய்தனர். நமது முந்தியபாடத்தில் நாம், ஆயிரம் ஆண்டுகள் என்பது முழுமையான முழுமைத்துவத்தின் அடையாளம் என்று கவனித்திருந்தோம்:[1] சாத்தான் முற்றிலுமாகக் கட்டப்பட்டிருந்தான், அதே*

வேளையில் வேதசாட்சியாக மரித்தவர்கள் முற்றிலுமாக ஆளுகை செய்தனர். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், ஒரு புறத்தில் *முற்றிலுமான தோல்வி* இருக்கையில், இன்னொரு புறத்தில் *முற்றிலுமான வெற்றி* இருந்தது!

ஆதிக்கிறிஸ்தவர்களுக்கு அந்த எதிர்நோக்கு அவசியமாயிருந்தது. பூமிக்குரிய கண்ணோக்கக் கருத்தில் இருந்து பார்க்கையில், சாத்தான் ஜெயித்துக் கொண்டிருந்ததாகவும் கிறிஸ்தவம் அழிந்து கொண்டிருந் ததாகவும் தோன்றியது. உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கு, "அது வெறும் மாயத்தோற்றமே! உண்மைநிலை இதோ: *நீங்கள்* ஜெயித்துக்கொண்டிருக் கின்றீர்கள்! உங்கள் உயிரை இழந்துபோவது பற்றிக் கவலைப்படாதீர்கள், ஏனென்றால் தங்கள் விசுவாசத்திற்காக வேதசாட்சியாக மரித்தவர்கள் உண்மையில் மரிக்கவில்லை. *அவர்கள் உயிருடன் இருக்கின்றனர்*, அவர்கள் இயேசுவுடன் *ஆளுகையும் செய்கின்றனர்*!" என்று வெளிப்படுத்தின விசேஷம் 20:1-6 உரத்துக் கூவிற்று.

வெளிப்படுத்தின விசேஷம் 20:4-6ல் இருந்து முன்னுக்குக் கொண்டு வரப்பட்ட வினோதமான மற்றும் திருகலான கோட்பாடுகளில் சிலவற்றைப் பரிசீலனை செய்வதைத் தவிர வேறு வழியெதுவும் எனக் கில்லை என்னும் அளவுக்கு அந்தக் கோட்பாடுகள் ஏராளமாயுள்ளன. இருப்பினும் நீங்கள் இவ்வசனங்களின் பின்வரும் எளிய கருத்தின்மீதான உங்கள் பார்வையை இழந்துபோய்விடாதிருக்கும்படி உங்களை வேண்டிக்கேட்டுக்கொள்கின்றேன்: நீங்கள் உண்மையுடன் நிலைத் திருந்தால், *சாத்தான் தோற்கின்றான், நீங்கள் ஜெயிக்கின்றீர்கள்!*

## ஆயிரம் ஆண்டு கண்ணோட்டங்களைக் குழப்பிக்கொள்ளுதல்

நீங்கள் அனேகமாக, "millennium" என்ற வார்த்தையைக் கேள்விப்பட்டு இருக்கலாம். "Millennium" என்பது "ஆயிரம்" என்பதற்கான இலத்தீன் வார்த்தையாகிய *mille* என்பதில் இருந்து வருகிறது. "Millennium" என்பது, "ஆயிரம் ஆண்டுகள்" என்று கூறுவதற்கான வேறொரு வழிமுறையாக மாத்திரம் உள்ளது.[2] வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரம், "ஆயிரம் ஆண்டுகள்" என்பது பற்றி வேதாகமம் பேசும் ஒருசில இடங்களில் ஒன்றாக உள்ளது[3] மற்றும் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே ஆயிரம் ஆண்டுகள் *அரசாட்சி* பற்றிக் குறிப்பிடுகிறது.

வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்படுகிற அடையாளத்துவ எண்கள் யாவற்றிலும், இந்த "ஆயிரம் ஆண்டுகள்" என்பதை மாத்திரம் மனிதர்கள் நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ள வேண்டியது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. பின்பு அவர்கள், "ஆயிரம் ஆண்டுகள்" பற்றிய தங்கள் இலக்கியக் கண்ணோட்டத்தைச் சுற்றி, இறையியலின் சிக்கலான முறைமையொன்றைக் கட்டியெழுப்புவது ஏன் என்றும் எனக்குத் தெரியவில்லை. இருப்பினும் இது நடைபெற்றுள்ளது - நாம் இதைப்பற்றி ஆய்வு செய்தாக வேண்டும்.

"ஆயிரம் ஆண்டுகள் கண்ணோட்டங்கள்" பற்றி எழுதும் யாவரும், பெரும்பாலும் ஒவ்வொரு விஷயத்தையும் பின்வரும் மூன்று பிரிவுகளில் ஒன்றாக வகைப்படுத்துகின்றனர்:

### ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குப் பின்பு இரண்டாம் வருகை இருக்கும் என்ற கொள்கை

ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குப் பின்பு இரண்டாம் வருகை இருக்கும் என்ற கொள்கையானது பல ஆண்டுகளுக்கு முன் மிகவும் பிரபலமான ஒரு அணுகுமுறையாக இருந்தது. இப்பொழுது இது ஏறக்குறைய செயலற்ற நிலையில் உள்ளது, இருப்பினும் பழைய விளக்கவுரைகளின் மறுபதிப்பு களில் இதைப் பற்றிய குறிப்புகளை நீங்கள் காண்பீர்கள்.

இதற்கான ஆங்கில வார்த்தையான "postmillennialism" என்பதில் உள்ள "post" என்ற சொல், "பின்பு" என்று அர்த்தப்படுகிறது. "Postmillennialism" என்றால், "ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு" என்று அர்த்தப்படுகிறது. "ஆயிரம் ஆண்டுகள்" முடிந்தபின்பு கிறிஸ்து [திரும்ப] வருவார் என்பதே இரண்டாம் வருகை பற்றி இந்தக் கொள்கைக்காரர்கள் குறிப்பிடும் கருத்தாக உள்ளது: "ஆயிரம் ஆண்டுகளுக்குப்" பின்பு கிறிஸ்து வருவார் என்பது முடிந்துவிட்டது என்று ஆயிரம் ஆண்டு பின் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் நம்பினார்கள். இந்தக் கொள்கைக்காரர்களில் பெரும்பான்மையானவர்கள், "Millennium" என்பதை நேரடியான அர்த்தத்தில் ஆயிரம் ஆண்டுகள் என்று எடுத்துக்கொள்வதில்லை, ஆனால் இது உலகத்தில் சுவிசேஷம் வெற்றிகொண்டு, பூலோகத்தின்மீது சமாதானம் மற்றும் வளமை ஆகியவை பரவும் "பொற்காலமாக" இருக்கும் என்று உய்த்துணர்ந்துள்ளனர். இரண்டு உலக யுத்தங்களும் இருபதாவது நூற்றாண்டின் மற்ற பிரச்சனைகளும், இந்த உய்த்துணர்வற்ற நற்கோட் பாட்டிற்கு முடிவுகட்டின.

### ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்பு இரண்டாம் வருகை இருக்கும் என்ற கொள்கை

இதற்கான ஆங்கில வார்த்தையான "premillennialism" என்பதில் உள்ள "pre"என்ற சொல், "முன்பு" என்று அர்த்தப்படுகிறது, எனவே "premillennialism" என்பது "ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. மீண்டுமாக, "ஆயிரம் ஆண்டு" அரசாட்சிக்கு முன்பு இரண்டாம் வருகை இருக்கும் என்ற கொள்கை இங்கு குறிப்பின் கருத்தாக உள்ளது: இந்தக் கொள்கைக்காரர்கள், கிறிஸ்துவின் வருகை "ஆயிரம் ஆண்டுகளுக்கு" முன்பு இருக்கும் என்று நம்புகின்றனர். "ஆயிரம் ஆண்டுகள்" - என்பதை, 365 நாட்கள் கொண்ட ஆண்டுகள் ஆயிரம் என்று நேரடி அர்த்தமாக எடுத்து கொள்கின்றனர். இவர்கள், கிறிஸ்து இந்த பூமிக்கு வந்து நேரடியான அர்த்தத்தில் ஒரு சிங்காசனத்தின்மீது வீற்றிருந்து, நேரடியான அர்த்தத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு, நேரடியான அர்த்தத்தில் எருசலேமில், நேரடியான அர்த்தத்தில் இஸ்ரவேலின் நாட்டில் இருந்து ஆளுவதற்குத் திரும்பி வருவார் என்று போதிக்கின்றனர்.[4]

**ஆயிரம் ஆண்டு அரசாட்சி இல்லையென்ற கொள்கை**

இதற்குரிய ஆங்கில வார்த்தையான "amillennialism" என்பதில் உள்ள "a" என்ற முன்னொட்டு வார்த்தையானது "இல்லை" அல்லது "இராத" என்று அர்த்தப்படுகிறது. இது ஒரு தவறான சொல்வழக்காக உள்ளது, ஏனெனில் "amillennialist" என்று அழைக்கப்படுகின்றவர்களில் பெரும் பான்மையானவர்கள், வெளிப்படுத்தின விசேஷத்தின் "ஆயிரம் ஆண்டுகள்" என்பதை நம்புகின்றனர்; "ஆயிரம்" என்பது இந்தப் புத்தகத்தில் உள்ள மற்ற எண்களைப் போன்றே ஒரு உருவகமாக மாத்திரம் உள்ளதென்று இவர்கள் நம்புகின்றனர். இருந்தபோதிலும், இது, "ஆயிரம் ஆண்டு அரசாட்சியை" அடையாளத்துவமாக எடுத்துக்கொள்பவர்களைக் குறிப்பிடுவதற்கான தர அளவையான இறையியல்ரீதியான சொற்றொடராயிருக்கிறது. இறையியலாளர்கள் என்னை "amillennialist" என்று வகைப்படுத்துவார்கள், ஆயினும் நான் எனக்கு இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தமாட்டேன்.

"ஆயிரம் ஆண்டுக் கண்ணோட்டங்களான" இந்த மூன்றில், ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்பு இரண்டாம் வருகை இருக்கும் என்ற கொள்கையானது, மட்டுமீறிய மற்றும் குழப்பமான கருத்துக்கள் ஏராளமானவற்றைப் பாய்ச்சியிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கு நாம் ஒரு தெளிவுமிக்க மற்றும் கருத்தறிவு வாய்ந்த அணுகுமுறையைப் பயன்படுத்தப் பிரயாசப்படுகையில், இந்தக் கொள்கையையே நாம் தொடர்ந்து எதிர்த்து நிற்க வேண்டியுள்ளது; ஆகையால் நாம், இந்தக் கொள்கையைப் பற்றி மிகவும் நெருக்கமாகப் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

## தவறாக வழிநடத்தும் ஆயிரம் - ஆண்டுப் பிழை

ஆண்டுகளினூடே பல்வேறு தனிநபர்கள், வெளிப்படுத்தின விசேஷம் 20ன் "ஆயிரம் ஆண்டுகளை" (ஏறக்குறைய) நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் இந்தச் சொற்றொடர் ஏதோ ஒருவகையில் இயேசுவினுடைய இரண்டாம் வருகையுடன் தொடர்பு கொண்டுள்ளது என்றும் பரிந்துரைத்துள்ளனர்/வாதிட்டுள்ளனர்.[5] இருப்பினும் இன்றைய நாட்களில் நிலவுகிற வகையில், யுகத்துவரீதியான[6] ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்பு இரண்டாம் வருகை இருக்கும் என்ற கொள்கையானது சார்புத்தன்மையில் புதிதாயிருக்கிறது, இது பிளைமவுத் பிரதெரன் குழுவைச் சேர்ந்த ஜான் நெல்சன் டார்பி என்பவரால் தொடங்கப்பட்டு, ஸ்கொஃபீல்டு வேதாகமத்தினால் பரப்பப்பட்டது, மற்றும் இது 1970களில் ஹால் லின்ட்ஸே என்பவரின் எழுத்துகளினால் பிரபலமாக்கப்பட்டது.[7]

வெளிப்படுத்தின விசேஷத்திற்கான இந்த அணுகுமுறையில் உள்ளதான முதல்நூற்றாண்டில் உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் என்பதில் குறைபாடு மற்றும் நமது கர்த்தரின் இரத்தத்தைக் கிரயம்கொடுத்து வாங்கப்பட்ட சபையின் வலியுறுத்தத்தைக் குறைத்தல் என்பவை உள்ளிட்ட இதன்சில குறைபாடுகள் ஏற்கனவே கலந்துரையாடப்

*பட்டுள்ளன.[8] இந்தப்பாடத்தில் நாம், ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்பு இரண்டாம் வருகை இருக்கும் என்ற கொள்கைக்காரர்கள், வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரம் தங்கள் இறையியல் கோட்பாட்டிற்கு மையக்கருத்தாக உள்ளதென்று கருதும் இந்த நம்பிக்கைக்கு எதிரான பலவீனங்களில் ஒருசிலவற்றின்மீது நாம் கவனம் செலுத்துவோம்:*

*(1) ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி கொள்கையின் அடிப்படை உபதேசங்கள், வெளிப்படுத்தின விசேஷம் 20ல் உள்ள இறைவெளிப்பாட்டு மொழிநடையின் தடுமாற்றமான அஸ்திபாரத்தின்மீது கட்டப்பட்டுள்ளன. பூமியின்மீது நேரடி அர்த்தமாக ஆயிரம் - ஆண்டுகள் அரசாட்சி இருக்கும் என்பதைப் பொறுத்தமட்டில் இது உண்மையாகும் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.* G. B. *கேயர்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்,*

> *நாம் புதிய ஏற்பாட்டிற்குத் திரும்பும்போது, யோவானைத் தவிர வேறு எந்த எழுத்தாளரின் எழுத்துக்களிலும், ஆயிரம் ஆண்டு அரசாட்சி பற்றிய நம்பிக்கைக்கான ஆதாரம் எதையும் கண்டறிவதில்லை. சொல்லப்போனால், கிறிஸ்து தமது விரோதிகள் யாவரும் கீழ்ப்படுத்தப்படும் வரையில் ஆளுகைசெய்வார் என்று பவுல் பேசுகின்றார், ஆனால் இது அவர் தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்ட நிகழ்ச்சியுடன் தொடங்கும் ஆளுகையாக உள்ளது (1 கொரிந்தியர் 15:24-28; இ.வ. மத்தேயு 13:41); ...[9]*

*ஒன்றுக்கு மேற்பட்ட சரீர உயிர்த்தெழுதல்கள் என்பது போன்ற சில உபதேசங்களும், வெளிப்படுத்தின விசேஷம் 20ன் குழப்பமான மொழி நடையின் அடிப்படையில் அமைந்துள்ளன.*

*இந்த அதிகாரம் பற்றிய நேரடி அர்த்தமான அணுகுமுறையைப் பற்றி ரே சம்மர்ஸ் என்பவர் பின்வருமாறு கூறினார்,*

> *வெளிப்படுத்தின விசேஷம் 20ன் வசனங்கள் 4, 5 மற்றும் 6 ஆகியவை விட்டுவிடப்பட்டிருந்தால், பூமியின்மீது கிறிஸ்து நேரடியான அர்த்தத்தில் ஆயிரம் ஆண்டுகள் அரசாளுவார் - எருசலேமில் அவர் உலகப்பிரகாரமான அரியணையை அமைத்து, பூமிக்குரிய ஏகாதிபதி என்ற வகையில் ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சியைத் தொடங்குவார் - என்பதுபற்றி எவரொருவரும் எக்காலத்திலும் கனவுகாணவும் இயலாது. இருப்பினும், உபதேசவியல், இறையியல் மற்றும் வரலாற்றின் தத்துவம் ஆகியவை உயர்வான அடையாளத்துவ வசனங்களின் இந்த நிச்சயமற்ற அடிப்படையின்மீதே கட்டியெழுப் பட்டுள்ளன.[10]*

*(2) ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி கொள்கையின் பெரும்பான்மை யான உபதேசங்கள் வெளிப்படுத்தின விசேஷம் 20ல் காணப்படுவதில்லை; அவைகள் அதில் உள்ளதுபோல் வாசிக்கப்படுகின்றன. இந்த அதிகாரம், ஆயிரம் - ஆண்டு அரசாட்சியைப் பற்றிக்கூறுவதாகக் யூகிக்கப்பட்டாலும், (இந்தக் கொள்கையைக் கொண்டுள்ளவர்களால் பரிந்துரைக்கப்பட்ட*

*படியான) அந்த அரசாட்சியைப் பற்றிய இன்றியமையாத விபரங்களில் பெரும்பான்மையானவை குறிப்பிடத்தக்க அளவில் இல்லாதிருக்கின்றன.*

*எடுத்துக்காட்டாக, பூமியின்மீது கிறிஸ்து ஆளுகை செய்தல் என்பது பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருப்பதில்லை. இவ்வசனப்பகுதியைக் கவனமாக வாசியுங்கள், அப்போது நீங்கள் விஷயம் இவ்வாறே உள்ளது என்பதைக் காண்பீர்கள். வெளிப்படுத்தின விசேஷம் 20ன் ஆயிரம் ஆண்டு அரசாட்சி பற்றி வில்லியம் ஹென்ரிக்சென் என்பவர், ''அது எங்கே நடைபெறுகிறது?'' என்று கேட்டார், பின்பு அவரே அதற்குப் பின்வருமாறு பதில் அளித்தார்:*

> *(அ) அரியணைகள் எங்கே, ஏனெனில் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்: "அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்." இப்போது, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுமையிலும் உள்ளபடி, கிறிஸ்து மற்றும் அவரது மக்கள் ஆகியோருக்கான சிங்காசனங்கள் எப்போதும் பரலோகத்திலேயே உள்ளன ... .[11]*
>
> *(ஆ) வேதசாட்சிகளாக மரித்தவர்களின் உருவமற்ற ஆத்துமாக்கள் எங்கே, ஏனெனில் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்: "இயேசுவினுடைய சாட்சியினிமித்தமும் ... சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும் ... கண்டேன்.'' யோவான், உடல்களை அல்ல, ஆத்துமாக்களையே கண்டார். அவர் உடல்கள் இல்லாத ஆத்துமாக்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கின்றார், ஏனெனில் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்: ''சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய'' ... ஆத்துமாவுக்கும் உடலுக்கும் இடையில் உள்ள வித்தியாசம்கூட வலியுறுத்தப் பட்டுள்ளது: "சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக் களையும்." ...*
>
> *(இ) இயேசு எங்கே ஜீவிக்கின்றார், ஏனெனில் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்: "அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்." இதன்படி கேள்வியானது பின்வருமாறு உள்ளது: இறைவெளிப்பாட்டின்படி, உயர்த்தப்பட்ட மத்தியஸ்தர் எங்கிருந்துகொண்டு இந்த அண்டத்தை ஆளுகை செய்கின்றார்? இயேசு எங்கே ஜீவிக்கின்றார்? பரலோகத்தில் என்பது தெளிவு! பரலோகத்தில்தான் ஆட்டுக்குட்டியானவர் பிதாவினுடைய கரங்களில் இருந்து புத்தகச்சுருளை வாங்கிக் கொள்கின்றவராகவும், அரியணையின் வலப்புறத்தில் அமருபவராகவும் வெளிப்படுத்தின விசேஷம் 5ல், குறிப்பிடப்பட்டுள்ளார். வெளிப்படுத்தின விசேஷம் 12, கிறிஸ்து "தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டார்" என்று தெளிவாய் உரைக்கிறது. ...[12]*

*ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி கொள்கையின் போதனைகள் வெளிப்படுத்தின விசேஷம் 20ல் காணப்படாத விஷயங்களின் பட்டியல் ஏறக்குறைய முடிவற்றதாயிருக்கிறது: இரண்டாம் வருகை, "பரவசநிலை" என்று அழைக்கப்படும் விஷயம், தாவீதின் அரியணை, எருசலேம் நகரம்*

அல்லது மாம்சத்திற்குரிய வகையில் யூதர்கள் என்பவை எதுவும் குறிப்பிடப்படுவதில்லை.

வெளிப்படுத்தின விசேஷம் 20 கிறிஸ்துவின் ஆளுகையின் கால அளவைச் சுட்டிக்காண்பிப்பதில்லை என்பது போதுமான அளவுக்கு ஆர்வத்திற்குரியதாக உள்ளது. "ஆயிரம் ஆண்டுகள்" என்பதை நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொண்டாலும்கூட, இவ்வசனப்பகுதியானது, வேதசாட்சிகளாக மரித்தவர்கள் "கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்" என்று மட்டும் உரைக்கிறது; இது கிறிஸ்து எவ்வளவு காலம் அரசாண்டார் என்பதைச் சுட்டிக்காண்பிப்பதில்லை. (பழைய ஏற்பாட்டு அரசர்களில் பலர் தங்கள் தந்தையருடன் ஒரு குறிப்பிட்ட காலம் அரசாண்டனர், ஆனால் அப்படிப்பட்ட கூற்றுகள், அவர்களுடைய தந்தையர் எவ்வளவு காலம் அரசாண்டனர், என்று நமக்குக் கூறுவதில்லை.[13])

ஜேம்ஸ் எஃபர்டு என்பவர், "இவ்வசனப்பகுதியில் இந்தக் கருத்துக்கள் உள்ளன என்று ஒருவர் கண்டறிவதற்கு, இவற்றை இறக்குமதி செய்தல் என்பதுதான் ஒரே வழியாக உள்ளது - மற்றும் அது, இவ்வசனப்பகுதி உண்மையில் கூறி அர்த்தப்படுத்துவது என்ன என்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யும் எவரொருவருக்கும் விருப்பத் தேர்வாக இருப்பதில்லை" என்று கூறினார்.[14]

(3) வெளிப்படுத்தின விசேஷம் 20ல் உள்ள உருவக மொழிநடையின் அடிப்படையில் அமைந்த, ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி கொள்கையின் போதனைகள், வேறிடத்தில் உள்ள வேதவசனங்களின் தெளிவான பகுதிக்கு நேர்மாறானவைகளாய் இருக்கின்றன:[15]

ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி கொள்கைக்காரர்கள், கிறிஸ்துவின் ஆளுகையானது எதிர்காலத்தில் ஏதோ ஒரு நாள் வரையிலும் தொடங்காதிருக்கும் என்று வெளிப்படுத்தின விசேஷம் 20 போதிப்பதாக உரிமைகோருகின்றனர், ஆனால் வேறிடத்தில் உள்ள வசனப்பகுதி, கிறிஸ்து தமது பிதாவினிடத்திற்கு ஏறிச்சென்றபோதே அவரது ஆளுகை தொடங்கிவிட்டது என்று தெளிவாகப் போதிக்கிறது. கிறிஸ்து, தாவீதின் அரியணையில் அமர்ந்திருத்தல் பற்றிப் பல வசனப்பகுதிகள் எடுத்துரைக்கின்றன. இவற்றில் நடபடிகள் 2ல் காணப்படும் பேதுருவின் பிரசங்கமும் ஒன்றாகும். தாவீது அரசரைப் பற்றி இந்த அப்போஸ்தலர் பின்வருமாறு கூறினார்,

> அவன் தீர்க்கத்தரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம்பண்ணினதை அறிந்தபடியால், அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக்குறித்து இப்படிச் சொன்னான். இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத் தத்தத்தின் படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது

*காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என் வலதுபாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று அவனே சொல்லியிருக்கிறான். ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் (நடபடிகள் 2:30-36).*

*இயேசுவின் உயிர்த்தெழுதலும் அவரது பரத்துக்கேறுதலும், "அவரது [தாவீதின்] சந்ததியில் ஒருவரை அவரது [தாவீதின்] அரியணையில் அமரச் செய்வதற்கான'' வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமாக உள்ளதைக் கவனியுங்கள். இயேசு, "தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டு" இருக்கின்றார் மற்றும் அவர் (இயேசு) தமது விரோதிகள் யாவரும் தமது பாதத்தின்கீழ் பாதபடியாக்கப்படும் வரையிலும், பரலோகத்தில் தேவனு டன் ஆளுகை செய்துகொண்டிருக்கின்றார்.*

*கிறிஸ்துவினுடைய ஆளுகையின் இந்த அம்சத்தின்மீது, 1 கொரிந்தியர் 15ல் பவுல் கவனம் குவிக்கிறார்:*

*ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக் கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவு மாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும் அவர் ஆளுகை செய்யவேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம். சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லி யிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப் படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார் (1 கொரிந்தியர் 15:22-28).*

*தேவன் ஏற்கனவே கிறிஸ்துவுக்கு ''எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தி'' இருக்கின்றார்; தற்போது கிறிஸ்து பரலோகத்தில் இருந்து ஆளுகை செய்துகொண்டிருக்கின்றார். 25ம் வசனத்தில் ''ஆளுகை'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை நிகழ்கால எச்சவினையாக (முற்றுப்பெறாத வினையாக) இருக்கிறது.[16] இவ்விடத்தில், நிகழ்காலவினை என்பது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. 25ம் வசனத்தை, ''எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும் அவர் (தொடர்ந்து) ஆளுகை செய்துகொண்டிருக்க வேண்டும்"*

என்று மொழிபெயர்க்க முடியும். மரணம் என்பதே தோற்கடிக்கப்பட வேண்டிய கடைசிச் சத்துருவாக உள்ளது என்று 26ம் வசனம் எடுத்துரைக்கிறது.

கிறிஸ்து தற்போது ஆளுகைசெய்து கொண்டிருக்கின்றார் என்பதை வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமேகூட தெளிவாக்குகிறது. அவர் ஏற்கனவே ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக இருக்கின்றார் (17:14; 19:16)![17]

கிறிஸ்துவின் ஆளுகை என்ற பாடக்கருத்துடன் அவரது இராஜ்யம் என்ற பாடக்கருத்தானது தப்பிக்க இயலாத வகையில் பிணைவுபட்டுள்ளது. சட்டப்படி, ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி கொள்கைக்காரர்கள், எதிர்காலத்தில் ஒரு தேதி வரையிலும் இயேசு தமது ராஜ்யத்தில் ஆளுகை செய்யமாட்டார் என்று போதிக்கின்றனர். இருப்பினும் வேதாகமத்தில் உள்ள தெளிவான வசனப்பகுதிகள், கிறிஸ்து தற்போது தமது இராஜ்யத்தின்மீது ஆளுகை செய்து கொண்டிருக்கின்றார்[18] - அதாவது, இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றிற்குப்பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் இராஜ்யம் தனது தொடக்கத்தைக் கொண்டிருந்தது - என்றே போதிக்கின்றன.

யோவான் ஸ்நானனும் இயேசுவும், இராஜ்யம் "சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கித்தனர் (மத்தேயு 3:2; 4:17). இயேசு தமது பூமிக்குரிய ஊழியத்தின்போது, தமது சீஷர்களிடத்தில், அவர்களின் வாழ்நாள் காலத்திலேயே அவர்கள் "தேவனுடைய இராஜ்யம் பெலத்தோடே வருவதை" காண்பார்கள் என்று கூறியிருந்தார் (மாற்கு 9:1). கிறிஸ்து பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்னதாகத் தமது சீஷர்களிடத்தில், பரிசுத்த ஆவியானவர் அவர்களிடத்தில் வரும்போது அவர்கள் பெலனைப் பெற்றுக்கொள்வார்கள் என்று கூறினார் (நடபடிகள் 1:6-8). பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் வந்தார் (நடபடிகள் 2:1-4), மற்றும் இவ்விதமாக இராஜ்யம் "பெலத்தோடே" வந்தது.[19] அதன்பின்பு தேவனுடைய வலது பாரிசத்திலிருந்துகொண்டு இயேசு தமது ஆளுகையைத் தொடங்கியிருந்தார் என்று பேதுரு அறிவிக்க முடிந்தது.

கொலோசெயில் இருந்த (கிறிஸ்த)வர்களுக்கு, தேவன் "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தி"னார் என்று பவுல் கூறினார் (கொலோசெயர் 1:13). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், தமது வாசகர்களிடம், "ஆகையால் அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் … கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்" என்று கூறினார் (எபிரெயர் 12:28).[20] மீண்டுமாக, ராஜ்யம் ஏற்கனவே இருக்கிறது என்ற போதனை வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் அடங்கியுள்ளது: இயேசு "நம்மை ராஜாக்களாக்கினார்" என்று முதல் அதிகாரத்தில் யோவான் எழுதினார் (வசனம் 6). அதே அதிகாரத்தில் யோவான், தாம் "கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் பொறுமைக்கும் … உடன் பங்காளனாய்" இருந்ததாகவும் கூறினார் (வசனம் 9). உபத்திரவமும் பொறுமையும் எதிர்காலத்தில் ஆயிரம் ஆண்டுகள்

*இருக்கப்போவதாக (குறிப்பிடப்பட) இல்லை; இராஜ்யமும் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.*[21]

*சரீரரீதியான பல உயிர்த்தெழுதல்கள் என்பது வெளிப்படுத்தின விசேஷம் 20ன் அடிப்படையில், ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி கொள்கைக்காரர்களின் இன்னொரு உபதேசமாக உள்ளது: அதாவது, "ஆயிரம் ஆண்டு அரசாட்சியின்" தொடக்கத்தில் நல்லவர்கள் தங்கள் சரீரத்தில் உயிர்த்தெழுதலும், "ஆயிரம் ஆண்டுகளின்" முடிவில் துன்மார்க்கர் தங்கள் சரீரத்தில் உயிர்த்தெழுதலும் நடைபெறும் என்ற கருத்து ஆகும்.*[22] *இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் நாம் "முதலாம் உயிர்த்தெழுதல்" என்ற சொற்றொடரைப் பற்றிக் கலந்துரையாடுவோம் (வசனங்கள் 5, 6); ஆனால் இப்போதைக்கு நாம், வேதாகமத்தின் தெளிவான வசனப்பகுதிகள் சரீரரீதியான ஒரே ஒரு உயிர்த்தெழுதலைப் பற்றி மாத்திரமே போதிக்கின்றன என்பதைக் கவனிப்போம்: இயேசு, "... பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" என்று கூறினார் (யோவான் 5:28, 29). பவுல் "நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு" என்று கூறினார் (நடபடிகள் 24:15அ).*

*இயேசு மற்றும் பவுல் ஆகியோருடைய இந்தக் கூற்றுக்கள், நல்லவர்களும் துன்மார்க்கரும் ஆகிய இருசாராருக்கும் பொதுவாக ஒரே சரீர உயிர்த்தெழுதலே உண்டு என்று போதிக்கின்றன.*[23] *இவைகள், நீதிமான்களின் சரீர உயிர்த்தெழுதலுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின்பு துன்மார்க்கரின் சரீர உயிர்த்தெழுதல் நடைபெறும் என்ற விஷயத்தை அனுமதிப்பதில்லை. நாம், "கோதுமை நடுவில் களைகள் பற்றிய இயேசுவின் உவமையில் (மத்தேயு 13:24-30, 36-43) உள்ள உண்மைநிலையை மும்முரமாய்க் கவனிக்க வேண்டும், இதில் உலக முடிவு என்ற அறுப்புக் காலம் வரும்வரையில் நன்மையும் தீமையும் பக்கம் பக்கமாக வளர்ந்து கொண்டிருக்கும்."*[24]

*நாம், வேதாகமத்தின் தெளிவான வசனப்பகுதிகளின் போதனைகளுக்கு முரண்படும் வகையில், உருவக மொழிநடையின் அடிப்படையில் கோட்பாடுகளைக் கொண்டிருக்கும்போது, எதை நாம் சத்தியம் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும்? டேனியேல் ரஸ்ஸல் என்பவர் இந்தக் கேள்வியைப் பற்றிப் பின்வருமாறு ஆழ்ந்து சிந்தித்தார்:*

> *உங்கள் மீது அதிகாரத்துவம் உடையதாக, நீங்கள் எதை எடுத்துக்கொள்வீர்கள்? சுவிசேஷங்கள் மற்றும் நிருபங்களின் தெளிவான கூற்றுக்களையா அல்லது வெளிப்படுத்தின விசேஷத்தின் உயர்வான அடையாள மொழிநடையையா? ஒருவேளை நீங்கள், குடிமை யுத்தம் பற்றிய உண்மைகளை உங்கள் முன் அமைத்து வைக்க மெக்மாஸ்டர் அல்லது ரோட்ஸ் போன்ற நம்பத்தகுந்த வரலாற்றாளர்களைக் கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். பின்பு*

*ஒருவேளை நீங்கள், ஜான் பிரவுணின் உடல் என்ற தலைப்பில் யுத்தத்தின் வரலாற்றை எழுதிய ஸ்டீபன் வின்சென்ட் பென்னெட் என்பவரைக் கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். இவற்றில் எதை நீங்கள் அதிகாரத்துவம் உடையதாக எடுத்துக்கொள்வீர்கள்? மெக்மாஸ்டர் மற்றும் ரோட்ஸ் ஆகியோரின் எழுத்துகளில் உள்ள விபரங்கள் பென்னெட் என்பவரின் விபரத்துடன் ஒத்துப்போகுமாறு அவற்றைக் கையாள நீங்கள் முயற்சி செய்வீர்களா? நிதானிப்பதற்கான எல்லாத் திறமையையும் நீங்கள் இழந்துபோய்விட்டால் அன்றி இவ்வாறு செய்யமாட்டீர்கள். நீங்கள் இவற்றைக் கையாண்டால், அதை இங்கு கூறப்பட்டதற்கு நேர் எதிரான வழியிலேயே செய்வீர்கள்.*[25]

*வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், உருவக வசனப்பகுதிகள் பற்றிய மனிதர்களின் விளக்கங்களுக்கு இசையுமாறு தெளிவான வசனப் பகுதிகளைத் திரித்துக் கூறுவதற்குப்பதில், தெளிவான வசனப்பகுதிகளுக்கு இசையும் வகையில் உருவக வசனப்பகுதிகள் விளக்கியுரைக்கப்பட வேண்டும்.*

*இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்களைப்போல்,*[26] *ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி கொள்கையைக் கொண்டுள்ளவர்களில் சிலர் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் குறைவானவைகளாகக் கண்டறிகின்றனர்: மகிமையுள்ள பரலோகம் பற்றிய நம்பிக்கை போதுமானதாக இருப்ப தில்லை; இவர்கள் சீர்திருத்தப்பட்ட பூமிக்கான நம்பிக்கையை விரும்பு கின்றனர். இவர்களுக்கு இயேசுவின் சிலுவையானது, இயேசுவின் கிரீடத் தைப்போன்று அவ்வளவு மன எழுச்சிமிக்கதாக இருப்பதில்லை என்பது உறுதி; பூமியின்மீது சமாதானம் என்ற கருத்தானது இருதயத்தில் சமாதானம் என்ற கருத்திற்கு முன்னிடத்தைப் பெறுகிறது; மற்றும் பாவ மன்னிப்பிற்கான வாக்குத்தத்தம், வியாதியை நீக்கிப்போடுதல் என்ற எதிர் பார்ப்புக்கு முன்பாக ஒளிமங்கித் தேய்ந்து விடுகிறது, பர்ட்டன் காஃப்மென் என்பவர் பின்வருமாறு எழுதினார்:*

*... நம்புவதற்கு அரிதான அழகுமிக்க பொற்காலம் ஒன்றிற்கான சமாதானமும் வெளிச்சமும் கொண்ட ஒரு கற்பனை நாடு, பூமியின்மீது அமையும் என்ற கனவுகளைப் பிடித்து ''தொங்கிக் கொண்டு" இருப்பவர்களுக்காக நாம் மிகவும் பரிதபிக்கின்றோம்; ஆனால் இவ்விதமாக மயக்கப்பட்டுள்ள மக்கள், புதிய ஏற்பாட்டில் இவ்விதமான வாக்குத்தத்தங்கள் எதுவும் இருப்பதில்லை என்பதைச் சகிப்புடன் கேட்கக் கூடுமென்றால் நன்றாயிருக்கும், நாம் "அநேக உபத்திரவங்களின் வழியாக'' தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் (நடபடிகள் 14:22); நாம் "அவரோடேகூடப் பாடநுபவிக்க" வேண்டும் (ரோமர் 8:17); தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் "துன்பப்படுவார்கள்" (2 தீமோத்தேயு 3:12); கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற யாவரும் ''தங்கள் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொள்ள" வேண்டும் (லூக்கா 9:23), ...*[27]

*புதிய ஏற்பாடு நமக்கு, பிரச்சினைகள் இல்லாத ஒரு உலகத்தை வாக்குத்தத்தம் செய்வதில்லை. மாறாக, தேவன் ''கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' என்று போதிக்கிறது (எபேசியர் 1:3). கிறிஸ்து (பூமிக்குரிய ஆளுகையை ஏற்படுத்துவதற்காக) இந்த பூமிக்குத் திரும்பி வருவார் என்பது போன்ற சில (மனித கற்பனையிலான) கோட்பாடுகள் அல்ல, மாறாக "கிறிஸ்துவுடன் இருக்கும்படி" புறப்பட்டுத் செல்லுதல் என்ற (வேதாகம ரீதியான) நம்பிக்கைதான், துன்புற்ற கிறிஸ்தவர்களை நிலைநிறுத்திற்று. இதைப் பற்றிப் பவுல், "அது அதிக நன்மையாயிருக்கும்" என்று கூறினார் (பிலிப்பியர் 1:23). ஆமென்! தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், மனிதர்களால் கற்பனை செய்யப்படுகிற உலகப் பிரகாரமான பயன்களைக் காட்டிலும் எல்லையற்ற வகையில் மேன்மை யானதாக உள்ளன!*

## *மன எழுச்சியூட்டுகிற ஆயிரம்-ஆண்டு சத்தியம்! (20:4-6)*

*அதுவரையில் மனிதக் கோட்பாடுகளைப் பற்றிய படிப்பு போதுமானதாக உள்ளது. இப்போது நாம், 4முதல் 6வரையுள்ள வசனங்கள் உண்மையில் கூறுவது என்ன என்பதை ஆய்வு செய்வோம். தானியேல் 7ம் அதிகாரமே (குறிப்பாக 9, 22, மற்றும் 27 ஆகிய வசனங்களைக் காணவும்). இப்பகுதிக்கான பழைய ஏற்பாட்டுப் பின்னணி என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எப்போதும் போலவே, யோவான் (ஏவுதலின் மூலமாக) தமது தனிச்சிறந்த கருத்து நோக்குகளைக் கொண்டிருந்தார்.*

*நமது ஆய்வு 4ம் வசனத்தின் மத்தியில் இருந்து தொடங்கும். அங்கு யோவான், ''இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும்[28] சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக் களையும், மிருகத்தையாவது அதன் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன்; ...''[29] என்று கூறினார்.*

*ஏற்கனவே வலியுறுத்தியபடி, உடல்களையல்ல, ஆனால் உருவமற்ற ஆவிகளையே யோவான் கண்டார்.[30] 6ம் அதிகாரத்தில் நமக்கு, அப்போஸ்தலர் ''கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்ட(து)'' நினைவூட்டப்படுகிறது (6:9). 6ம் அதிகாரத்தில் இருந்தவர்கள்போல், இரட்சிக்கப்பட்டிருந்த இவர்களும் தங்கள் விசுவாசத்திற்காக வேதசாட்சியாக மரித்திருந்தனர்.[31] வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டபோது, மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு ஒரு கோடாரி அல்லது பட்டயத்தினால் தலையை வெட்டுதல் என்பது தண்டனையை நிறைவேற்றுவதற்கு தேர்ந்து கொள்ளப்பட்ட ரோம முறைமையாய் இருந்தபடியால், இவர்கள் ''சிரச்சேதம் பண்ணப்பட்டவர்கள்'' என்று கூறப்பட்டு இருக்கலாம்.*

இருப்பினும் இவர்களின் எண்ணிக்கையில், இராயனை ஆராதிக்காத படியால், சிலுவையில் அறையப்பட்ட சிலர், அரங்க சாலையில் காட்டு மிருகங்களால் உடல் கிழிக்கப்பட்ட சிலர் அல்லது வேறு சில வழிமுறைகளில் கொலைசெய்யப்பட்ட சிலர் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர்.

20:4ம் வசனம் ஒரு குழுவைக் குறிப்பிடுகிறதா அல்லது இரண்டு குழுக்களைக் குறிப்பிடுகிறதா என்பது பற்றிச் சில கேள்விகள் உள்ளன. யோவான் - வேதசாட்சிகளாக மரித்தவர்கள் என்ற - ஒரே ஒரு குழுவைத்தான் கண்டார், மற்றும் "மிருகத்தையாவது ... வணங்காமலும்" என்று தொடங்குகிற பகுதியானது இவர்களைப் பற்றியே விவரிக்கிறது என்று சிலர் நினைக்கின்றனர். மற்றவர்களோ, மூலவசனத்தின்[32] வார்த்தையமைப்பு இரண்டு குழுக்களைச் சுட்டிக்காண்பிக்கிறது என்று விவாதம் செய்கின்றனர். இது குறிப்பிடத்தக்க கேள்வியாக இருப்பதில்லை, ஆனால் உருவமற்ற ஆத்துமாக்களின் இரண்டு குழுக்களை யோவான் கண்டார் என்ற கருத்தையே நான் ஆதரிக்கின்றேன்: அதாவது வேதசாட்சிகளாக மரித்தவர்கள் மற்றும் ரோம அரசாங்கத்தின் ஒடுக்குதலுக்கு அடிபணியாமல் எஞ்சிநின்ற மற்றவர்கள். வெளிப்படுத்தின விசேஷம் வேதசாட்சியாக மரித்தவர்களை, மற்ற வழிமுறைகளில் துன்புறுத்தப்பட்டும் உண்மையாக விசுவாசத்தில் நிலைத்து நின்றவர்களுக்கு மேலாக உயர்த்துவதில்லை.[33]

வில்லியம் பார்க்ளே என்பவர், "பழங்கால சபையில், உபத்திரவத்தின் நாட்களில் இரு சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டன. *Martyrs* எனப்படுபவர்கள், தங்கள் விசுவாசத்திற்காக உண்மையில் மரித்தவர்கள்; *confessors* எனப்படுவார்கள், கிறிஸ்துவினிடத்தில் தாங்கள் கொண்டிருந்த பற்றுதியின் காரணத்தால் மரணத்திற்கு ஒப்பான எல்லாத் துன்பங்களையும் அனுபவித்தவர்கள்" என்று எழுதினார்.[34] ஹென்றி B. ஸ்வீட் என்பவர் confessors எனப்படுபவர்களை, ''உண்மையில் வேதசாட்சிகளாக மரிக்காதிருந்தாலும், துன்புறுதல், இழிவானபேச்சு, சிறையில் அடைபடுதல், உடைமைகளை இழத்தல், தங்களின் இல்லங்கள் மற்றும் தனிப்பட்ட உறவுகளில் சீர்குலைவு ஆகியவற்றைக் கிறிஸ்துவுக்காக மனவிருப்பத்துடன் சகித்துக்கொண்டவர்கள்''[35] என்று அடையாளப்படுத்தினார். ஒரு கோடாரியோ அல்லது மாரடைப்போ, மரணத்திற்கு எது காரணமாய் இருந்தாலும், ஒவ்வொருவரும் கர்த்தருக்கு உண்மை நிறைந்தவர்களாய் இருந்த நிலையிலேயே மரித்தனர் என்பதே இவ்வசனப்பகுதியின் கருத்துத்தாக்கமாக உள்ளது.

நாம் காணப்போகின்றபடி, இவ்வசனப்பகுதியில் இருந்து, ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும், பொதுவான நடைமுறைப்பயன்பாடுகள் ஏற்படுத்தப்பட முடியும், ஆனால் தங்கள் விசுவாசத்திற்காகத் துன்புற்று இருந்தவர் களின்மீது, அதிலும் விசேஷமாக, வேதசாட்சிகளாக மரித்திருந்தவர்கள்மீது வலியுறுத்தம் உள்ளது.

**ஆளுகை செய்தல் பற்றிய மறு உறுதிப்பாடு**

''மரணபரியந்தம் உண்மையாய் நிலைத்திருந்தவர்களுக்கு என்ன நேரிட்டது?'' என்பது தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்குப் பற்றி எரியும் கேள்வியாக இருந்தது. அவர்கள் மரித்து, மறக்கப்பட்டிருந்தார்களா அல்லது அந்தத் தியாகம் மதிப்புக்குரியதாக இருந்ததா? இதற்கு யோவானின் பதில் இங்குள்ளது: ''அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக்கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும், தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைக் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்'' (வசனம் 4).

உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கு வேறு எவ்விடத்திலும் நடைமுறைப் படுத்தப்படாத வாக்குத்தத்தங்கள் எதுவும், இவ்வசனத்தில் (மற்றும் உடனடியான இதைத் தொடர்ந்து வரும் வசனங்களில்) காணப் படுவதில்லை. எடுத்துக்காட்டாக, ஜெயங்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் வெளிப்படுத்தின விசேஷம் 3ல் பின்வரும் வாக்குத்தத்தத்தை இயேசு கொடுத்தார்: "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்'' (வசனம் 21). மீண்டுமாக, வெளிப்படுத்தின விசேஷம் 5:10ம் வசனம், அடிப்படையில், 20:4, 6ல் உள்ளதுபோன்ற சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்துகிறது: "எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை [கிறிஸ்துவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்ட எல்லாரையும்] ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம்'' (வசனம் 1:6ஐயும் காணவும்).

நாம், 5:10ஐப் படித்தபோது, கிறிஸ்தவர்கள் பல்வேறு வழிகளில் அரசாளுகின்றனர் என்று நாம் வலியுறுத்தியிருந்தோம்: (1) கிறிஸ்தவர்கள், சபை (மத்தேயு 16:18, 19) என்ற கிறிஸ்துவின் இராஜ்யமாக உள்ளனர் (வெளிப்படுத்தின விசேஷம் 1:6). (2) தேவன் அவர்களின் பிதாவாக இருப்பதால் (1 கொரிந்தியர் 1:3), அவர்கள் இராஜரீகமான குடும்பத்தின் அங்கமாக உள்ளனர். (3) கிறிஸ்து இப்போது ஆளுகை செய்துகொண்டு இருப்பதால் (நடபடிகள் 2:33-36; 1 கொரிந்தியர் 15:25), மற்றும் கிறிஸ்தவர்கள் "கிறிஸ்துவுக்குள்'' இருப்பதால் (2 கொரிந்தியர் 5:17), அவரது ஆளுகையை அவர்கள் பகிர்ந்து கொள்கின்றனர். (4) கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதால், அவர்கள்மீது மரணம் இனியும் ஆளுகை செய்வதில்லை, மாறாக அவர்கள் "கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்கள்'' (ரோமர் 5:17; வசனங்கள் 14 மற்றும் 21 ஆகியவற்றையும் காணவும்). யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களின் கருத்துநோக்கில், ஆளுகை செய்தல் என்பதன் கருத்து,

*வெற்றி என்பதையே முதன்மையாக அர்த்தப்படுத்திற்று. கிறிஸ்துவின் பலத்தினால் தாங்கப்பட்ட கிறிஸ்தவர்கள், தங்கள் வாழ்வு, அடைவிடம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டுடன் நிலைத்து நின்று, தங்கள் வழிகளில் வாழ்வு இட்ட ஒவ்வொரு தடையின்மீது ஆளுகைசெய்தனர்.*[36]

இவை யாவும் இயல்பான கேள்வியொன்றைத் தூண்டுகின்றன: இயேசுவுடன் ஆளுகை செய்யும் வாக்குத்தத்தம் கிறிஸ்தவர்களுக்குப் பொதுவாகக் கொடுக்கப்பட்டிருந்தது என்றால், வேதசாட்சிகளாக மரித்தவர்கள் குறித்து அந்த வாக்குத்தத்தத்தை மீண்டும் கூறுவதற்கான நோக்கம் என்ன? அந்த வாக்குத்தத்தம் மரணத்தினால் ஒன்றுமற்றதாக்கப் படவில்லை, ஆனால் அதற்கு மாறாக அது நிறைவேற்றத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்பதைத் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் அறிவது அவசியமாய் இருந்தது என்பதே இதற்குப் பதிலாகும்! மீண்டுமாக நான், ''ஆயிரம் ஆண்டுகள்'' ஆளுகை செய்தல் என்பதன் உருவகம், வேதசாட்சிகளாக மரித்தவர்களின் ஆளுகையினுடைய முழுமைத் தன்மையை, அவர்களின் வெற்றியை அடிக்கோடிட்டது என்பதை வலியுறுத்துகிறேன்.

“நியாயத்தீர்ப்பு கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டது” (வசனம் 4அ) என்பது வேதசாட்சிகளாக மரித்தவர்களின் ஆளுகை பற்றிய சொல்விளக்கங்களில் ஒன்றாக உள்ளது. தானியேல் 7:22ல் உள்ள இதைப்போன்ற சொற்றொடர், “நியாயவிசாரிப்பு அவர்களுக்கு ஆதரவாகச் சென்றது'' என்று அர்த்தப்படுத்திற்று - வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பரிசுத்தவான்கள் நியாயப்படுத்தப்பட்டனர், அது இவ்விடத்தில் அர்த்தமாக இருக்கலாம், ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 20ன் சந்தர்ப்பப்பொருள், அவர்களின் விரோதிகளை வெற்றிகொள்ளுதல் என்ற கருத்தை ஆதரிக்கிறது: பூமியின்மீது அவர்களைக் குறித்து அவர்களின் விரோதிகள் நியாயத்தீர்ப்புச் செய்ய அமர்ந்து அவர்களுக்கு மரண ஆக்கினைத் தீர்ப்பைக் கொடுத்தனர். இப்போது, பணிப்பொறுப்புகள் தலைகீழாக மாற்றம் அடைந்தன, அவர்கள் [பரிசுத்தவான்கள்] நியாயாசனங்களில் அமர்ந்தனர்!

துன்மார்க்கருக்கு நியாயத்தீர்ப்புச் செய்வதற்குக் கிறிஸ்தவர்கள் [நியாயாசனத்தில்] அமருதல் என்ற கருத்து புதியதாக இருந்ததில்லை. இயேசு தமது சீஷர்களிடத்தில், அவர்கள் “இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல்'' உட்காருவார்கள் என்று கூறியிருந்தார் (லூக்கா 22:30).[37] பவுல் “பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள்'' என்றும் அத்துடன் கூடுதலாக, அவர்கள் ''தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்பார்கள்''[38] என்றும்கூட எழுதினார் (1 கொரிந்தியர் 6:2, 3).[39] இவைகள் புரிந்துகொள்ளச் சுலபமான வசனப்பகுதிகளாய் இருப்பதில்லை, ஆனால் இவ்வசனங்கள், மற்ற தனிநபர்களின் நிறைவான அடைவிடத்தைக் கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட முறையில் முடிவு செய்வார்கள் எனப் போதிப்பதில்லை; அது தேவனுடைய தனிப்பட்ட உரிமையாக உள்ளது என்று பெரும்பான்மை யானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.[40] இதற்கு மறுபுறத்தில், கிறிஸ்தவர்கள்

*என்ற வகையில் நாம், இந்த உலகத்தை "நியாயந்தீர்க்கின்றோம்" என்பதில் பல கருத்துணர்வுகள் உள்ளன: நியாயத்தீர்ப்பிற்குக் கர்த்தருடைய தர அளவையாக உள்ள வசனத்தை நாம் பிரசங்கிக்கின்றோம் (யோவான் 12:48), அது பாவத்தை வெளியரங்கமாக்குகிறது. மேலும் நமது வாழ்வின் மூலமாக நாம், தேவனுடைய தர அளவைகளின்படி வாழுதல் என்பது மக்களுக்குச் சாத்தியமானதுதான் என்று காண்பிக்கின்றோம், இவ்விதமாக நாம் அவ்வாறு செய்யத்தவறுபவர்களைச் சுட்டிக்காண்பிக்கின்றோம்.*

*இருப்பினும் வெளிப்படுத்தின விசேஷம் 20ன் ''நியாயந்தீர்த்தல்'' என்பது, கர்த்தருக்காக மரித்தவர்கள் ஆளுகை செய்து கொண்டிருந்தனர் என்ற ஆய்வுக்கருத்தை உயர்த்துவதாக மாத்திரம் காணப்படுகிறது: அவர்கள் வெற்றி கொண்டிருந்தனர்! சாத்தான் கீழே தள்ளப்பட்டிருந்தான், அவர்கள் மேலே உயர்த்தப்பட்டிருந்தனர்!*

**உயிர்த்தெழுதல் பற்றிய ஒரு குறிப்பு**

*வெற்றியின் கருத்து 4ம் வசனத்தின் பிற்பகுதியில் தொடருகிறது: "அவர்கள் உயிர்த்து[41]... அரசாண்டார்கள்."*

*ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்பு இரண்டாம் வருகை இருக்கும் என்ற கொள்கையைக்கொண்டுள்ளவர்கள், கிறிஸ்து மறுபடியும் வந்தபிறகு சரீர உயிர்த்தெழுதல் ஒன்று நடக்கும் என்பதற்கு இந்த ''உயிர்த்து'' என்பதைக் கருத்தாக ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். இருப்பினும் ''உயிர்த்து'' என்பது ''ஆளுகை செய்தல்'' என்பதுடன் இணைவு கொண்டுள்ளது மற்றும் உருவமற்ற ஆத்துமாக்கள் இக்காட்சியின் தொடக்கத்தில், பரலோகத்தில் அரியணைகளில் அமர்ந்து (ஆளுகை செய்து கொண்டு[42]) இருந்தன என்பதைக் கவனியுங்கள். இவ்வசனப்பகுதியானது, வேதசாட்சிகளாக மரித்தவர்கள் (எதிர்காலத்தில்) ஏதோ ஒரு நாளில், உயிர்த்து இயேசுவுடன் ஆளுகை செய்வார்கள் என்று போதிப்பதில்லை. உண்மையுள்ளவர்களாய் மரித்தவர்கள் ஏற்கனவே உயிர்த்து ஆளுகை செய்துகொண்டிருந்தனர் என்பதே இவ்வசனப்பகுதியின் கருத்தாக உள்ளது.*

*மீண்டுமாக, உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தம் என்பது கிறிஸ்தவர்களுக்குப் பொதுவில் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாக உள்ளது (யோவான் 5:24ஐக் காணவும்) - மற்றும் பாவத்திலிருந்து இரட்சிப்பு என்பது ஒரு உயிர்த்தெழுதல் (ஜீவனுக்குள்ளாகுதல்) என்று அடிக்கடி சித்தரிக்கப் பட்டுள்ளது. பவுல், "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்" என்று கூறினார் (ரோமர் 6:4). மேலும் அவர், "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் ... அக்கிரமங்களிலே மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார் ... கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" என்றும் எழுதினார் (எபேசியர் 2:4-7). மீண்டுமாக அவர், "நீங்கள்*

*கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" என்று கூறினார் (கொலோசெயர் 3:1).*

*மீண்டும் ஒரு முறை, "எல்லாக் கிறிஸ்தவர்களும் 'உயிர்ப்பிக்கப்பட்டு' ஜீவனுள்ளவர்களாய் இருக்கின்றனர் என்றால் வேதசாட்சிகள் 'உயிர்ப் பிக்கப்பட்டது' குறித்துப் பரிசுத்த ஆவியானவர் ஏன் வலியுறுத்துகின்றார்?" என்பது இயல்பான கேள்வியாக உள்ளது. இதற்குப் பதிலானது அடிப்படையில் முன்பு கூறிய பதிலைப் போன்றதாகவே உள்ளது: ஒரு பரிசுத்தவானுடைய மரணம் என்பது கிறிஸ்துவுக்குள் அவரது "புதிய ஜீவ னுக்கு" முடிவை ஏற்படுத்துவதில்லை. மாறாக, அவரது மரணமானது அவர் முன் ஒருபோதும் அறிந்திராத வகையிலான "உயிர்த்தலை அவருக்குக் கொண்டு வருகிறது."*

*5ம் வசனத்தில், வேதசாட்சிகளாய் மரித்திருந்தவர்கள் மற்றும் உண்மைத் தன்மையுடன் இருந்து மரித்த பிறர் ஆகியோரின் இந்த ''உயிர்த்தல்'' என்பது ''முதலாம் உயிர்த்தெழுதல்'' என்று அழைக்கப்பட்டுள்ளது.[43] முன்பே குறிப்பிட்டபடி, ''முதலாம் உயிர்த்தெழுதல்" என்ற சொற்றொடரானது கற்பனை செய்யப்பட்ட நேரடி அர்த்தத்திலான ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சியின் தொடக்கத்தில் நல்லவர்கள் தங்கள் சரீரத்தில் உயிர்தெழுதல் என்பது பற்றி ஒன்றும் செய்வதற்கில்லை. மாறாக இது, சந்தர்ப்பப்பொருளில், ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவுடன் தொடங்கி அவர் ''கர்த்தருக்குள்'' மரிக்கின்றபோது (வெளிப்படுத்தின விசேஷம் 14:13) உச்சக்கட்டத்தை அடைகிறதான ஆவிக்குரிய உயிர்த்தெழுதலாக உள்ளது. இது ''கிறிஸ்துவுடன் இருப்பதற்காக'' உலகத்தை விட்டுப்பிரிதலின் (பிலிப்பியர் 1:23) விளைவாக உள்ளது, இவ்விதமாக, ஒருவர் "கர்த்தரிடத்தில் குடியிருப்பதை" (2 கொரிந்தியர் 5:8) கண்டறிகிறது. இது கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தினுடைய நிறைவேற்றமாக உள்ளது: ''என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்'' (மத்தேயு 10:39). இதை வெளிப்படுத்தின விசேஷம் 2:10, "ஜீவகிரீடம்" என்று அழைக்கிறது. மரணம்வரை உண்மையாய் இருப்பவர்கள் "வாழ்வை" கொண்டுள்ளனர். கடைசியில் அவர்கள் உண்மையில் வாழ்வு என்பது எதைப்பற்றியது என்பதை அறிகின்றனர்!*

*கர்த்தருக்குள் மரிக்கின்றவர்களுக்கு நேர் எதிராக, "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை" (வசனம் 5அ). ''மரணமடைந்த மற்றவர்கள்'' என்ற சொற்றொடரின் அர்த்தமானது, 4ம் வசனத்தில் யோவான் யாரைக்கண்டார் என்பதைச் சார்ந்துள்ளது.[44] சந்தர்ப்பப்பொருளில் இது, ''இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் ... தேவனுடைய வசனத்தினிமித்தமும்'' என்ற நிலைமையைப் பற்றிக்கொண்டிராமல், ''மிருகத்தையாவது அதன் சொரூபத்தையாவது" வணங்கியவர்களாய் இருந்து "தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்'' கொண்டு இருந்தவர்களை (வசனம் 4)க் குறிப்பதாகக் காணப்படுகிறது.*

NASB வேதாகமம் these "did not *come to life* until the thousand years were completed" [இவர்கள் "ஆயிரம் ஆண்டுகள் நிறைவேறுமளவும் உயிரடைய வில்லை''] என்று உரைக்கிறது. இந்தச் சொற்றொடராக்கம், ''உயிர்த்தெழுதல்'' என்பது சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதல் என்று பலரும் விளக்கம்தரக் காரணம் ஆயிற்று.[45] இருப்பினும், மூலவசனத்தில், "the rest of the dead did not *live* until the thousand years were completed" ["மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிர் வாழ்ந்திருக்கவில்லை"] என்று மாத்திரம் உள்ளது.[46] வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் அவர்கள், "கிறிஸ்துவுக்குள்" மரித்து இருந்தவர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்பட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அனுபவித்திருக்கவில்லை. மீண்டும் ஒருமுறை, பரிசுத்த ஆவியானவர் ஒரு எதிர்மறையான ஒப்பீட்டை ஏற்படுத்தினார்: பூமியில், கிறிஸ்தவர்கள் மரணத்திற்கு உள்ளாக்கப்பட்ட வேளையில், அவர்களைத் துன்புறுத்தியவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்; மரணத்திற்குப் பின்பு, கிறிஸ்தவர்கள்தாம் வாழ்ந்துகொண்டு உண்மையிலேயே வாழ்ந்துகொண்டு இருந்தனர், அவ்வேளையில் அவர்களின் விரோதிகள் மரித்து, மரித்து, மரித்து இருந்தனர்.[47]

"ஆயிரம் ஆண்டுகள்" என்பது சாத்தான் கட்டிவைக்கப்பட்ட மற்றும் மரித்த கிறிஸ்தவர்கள் உயிரோடிருந்து ஆளுகை செய்கின்ற - இப்போது உள்ள வேளையாக இருக்கிறது.[48] எனவே "ஆயிரம் ஆண்டுகள்" என்பது "முடிவடைந்தது" என்ற கூற்றானது இந்தக் காலத்தின் முடிவை - கிறிஸ்து மறுபடியும் வரும்போது, மரித்தவர்கள் யாவரும் உயிர்ப்பிக்கப்பட்டு ஒவ்வொருவரும் நியாயத்தீர்ப்படையும் வேளையை - குறிப்பதாக இருக்க வேண்டும். நாடகத்துவமான இந்தத்தொடர் நிகழ்ச்சியானது, நாம் இந்த அதிகாரத்தின் 11முதல் 15வரையுள்ள வசனங்களைப் படிக்கும்போது கலந்துரையாடப்படும்.[49]

### அகம்மகிழ ஒரு காரணம்

6ம் வசனம் இந்தப் பகுதியை, இப்புத்தகத்தின் ஐந்தாம் பாக்கியத்தைக் கொண்டு முடித்துவைக்கிறது. இது, ''முதல் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை, …'' என்று தொடங்குகிறது. "இரண்டாம் மரணம்" என்பது 20:14ல் அடையாளப் படுத்தப்படுகிறது: ''… அக்கினிக்கடலிலே (வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் நரகத்திலே) தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்," கர்த்தருக்குள் உண்மையாயிருந்து மரித்தவர்கள் இழந்துபோகப்படுதல் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை, என்ன ஒரு ஆசீர்வாதம்!

யோவான், ''இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" என்று முடித்தார் (வசனம் 6ஆ). கிறிஸ்தவர்கள் யாவரும் ஆசாரியர்களாய் இருக்கின்றோம் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (1 பேதுரு 2:5, 9; வெளிப்படுத்தின விசேஷம் 1:6; 5:10). மீண்டும் கேட்குதல் என்ற இடர்ப்பாட்டில் நான், "பின்பு வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரம்,

*வேதசாட்சியாக மரித்தவர்களும், உண்மையுடன் இருந்து மரித்த மற்றவர்களும் ஆசாரியர்களாய் இருக்கின்றனர் என்று வலியுறுத்துவது ஏன்?" என்று கேட்கின்றேன். இந்த வலியுறுத்தமானது, மரணம் நம்மைத் தேவனிடத்தில் இருந்து துண்டிப்பதில்லை, மரணம் நாம் யாராக மற்றும் என்னவாக இருக்கின்றோம் என்ற விஷயத்தை இல்லாததாக்குவதில்லை, மரணம் என்பது ஆசீர்வாதங்கள் முடிவடைந்தன என்று அர்த்தமாவதில்லை என்பவற்றை உறுதிப்படுத்துகிறது. மாறாக, அந்த ஆசீர்வாதங்கள் யாவும் சிறப்பான அலங்கரிப்புடையவைகளாகவும் பிரமிப்பூட்டுபவைகளாகவும் ஆவதை நாம் காணுகின்றோம்! எனது பழைய நண்பர் ஒருவர் அடிக்கடி கூறியபடி, "நீங்கள் இன்னமும் ஒன்றையும் காணவில்லை!"*

## *முடிவுரை*

*இது ஒரு சுலபமான பாடமாக இருந்திருக்கவில்லை, ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 20:4-6ன் பிரதான வலியுறுத்தத்தைப் பற்றிய கண்ணோக்கை நீங்கள் இழந்துபோகக்கூடாது என்று நான் ஜெபிக்கின்றேன்: நீங்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் நிலைத் திருந்தால், சாத்தான் தோற்றுப்போகின்றான், நீங்கள் வெற்றியடை கின்றீர்கள்!*

*முதல் நூற்றாண்டில் வாழ்ந்து, தங்களின் விசுவாசத்திற்காக மரித்தவர்கள்மீதே நமது வசனப்பகுதி வலியுறுத்தம் கொண்டுள்ளது. மரணம் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தரப்பட்ட வாக்குத்தத் தங்களை வியர்த்தமாக்குவதில்லை என்பது வலியுறுத்தப்பட்டது, விசுவாசத்துடன் மரித்தவர்கள் அந்த வாக்குத்தத்தங்களை இன்னமும் மகிழ்வுடன் அனுபவித்துக்கொண்டிருந்தனர். இப்போது, நாம் இந்தப் பாடத்தை முடிக்கின்ற இவ்வேளையில், அதை நான் திருப்பிப்போட விரும்புகின்றேன்: வெளிப்படுத்தின விசேஷம் 20ல் வேதசாட்சியாக மரித்தவர்களுக்கு கிடைத்த ஆசீர்வாதங்கள் உங்களுக்கும் உரியவைகளாகக்கூடும்: நீங்கள் உண்மையான வாழ்வை அறியமுடியும்; நீங்கள் கர்த்தருக்கென்று ஒரு ஆசாரியராக இருக்க முடியும்; நீங்கள் கிறிஸ்துவுடன் ஆளுகை செய்யமுடியும். மேலும், நீங்கள் இதை "ஆயிரம் ஆண்டுகளுக்கும்" - முற்றிலுமாக மற்றும் முழுமையாக - செய்யமுடியும். இது பிரமிப்பூட்டுவதாக இல்லையா?*

*இந்த ஆசீர்வாதங்கள் உங்களுக்குரியவைகளாக முடியும், ஆனால் இவை உங்களுடையவைகளாய் இருக்கின்றனவா? நீங்கள் உங்களைத் தாழ்மையான கீழ்ப்படிதலில் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து இருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் வாழ்வை அவருக்கு அர்ப்பணித்து இருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் ஜீவனை "அவருக்குள் மறைத்து" இருக்கின்றீர்களா? (கொலோசெயர் 3:3.) இல்லை என்றால், அவரது ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள்வதற்கு இனி ஒரு கணம்கூடக் காத்திருக்காதீர்கள்![50]*

# போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*இரண்டு பத்திகளைக்கொண்டு நீங்கள் ஒரு ஒப்பீட்டை ஏற்படுத்த முடியும்: முதல் பகுதியின் மேற்பகுதியில், "எல்லாக் கிறிஸ்தவர்களும்" என்று பெயரிடவும், மற்றும் இரண்டாம் பத்தியின் மேற்பகுதியில் ''வேதசாட்சிகளாக மரித்தவர்கள்'' என்று பெயரிடவும். ஒவ்வொரு தலைப்பின் கீழும், 20:4-6ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசீர்வாதங்களைப் பட்டியலிட்டு, வேதசாட்சிகளாக மரித்தவர்களுக்கென்று 20ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு ஆசீர்வாதமும், வேதாகமத்தின் வேறிடங்களில் கிறிஸ்தவர்களுக்கும் குறிப்பிடப்பட்டுள்ளதை வலியுறுத்தவும். பின்பு, வேதசாட்சிகளாகவும் மரித்தவர்கள் இன்னமும் அந்த ஆசீர்வாதங்களைக் கொண்டுள்ளதாக வலியுறுத்தப்படுவது ஏன் என்பதை விளக்கவும்.*

*நமது வேதபாடப் பகுதியை யாரோ ஒருவர், "மிகவும் இருட்டான மேகத்தின் வெள்ளிப் புறக்கோடு" என்று அழைத்துள்ளார். இவ்விதமாக, தாமஸ் டொர்ரென்ஸ்[51] என்பவர் இவ்வசனப்பகுதிக்கு ''வெள்ளிப் புறக்கோடு" என்று தலைப்பிட்டுள்ளார்.*

---

*குறிப்புகள்*

*[1]இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "சாத்தானைக் கட்டுவித்தல்" என்ற பாடத்தில் "ஆயிரம்" என்பதன் அடையாளத்துவம் பற்றிய குறிப்புகளைக் காணவும். [2]நீங்கள் இதனுடன் தொடர்புடைய பின்வரும் சொற்றொடரையும் எதிர்கொள்ளலாம்:* "chiliasm." *இது "ஆயிரம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையில் (chilos) இருந்து வந்துள்ளது மற்றும் இது வெளிப்படுத்தின விசேஷம் 20ன் "ஆயிரம் ஆண்டுகள்" பற்றிய குறிப்பான ஒரு கோட்பாட்டைக் குறிக்கிறது. [3]வேதாகமத்தில் பல இடங்களில் "ஆயிரம் ஆண்டுகள்" என்ற சொற்றொடர், ஒரு நீண்ட முடிவற்ற காலத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது (சங்கீதம் 90:4; பிரசங்கி 6:6; 2 பேதுரு 3:8). இந்தக் குறிப்புகளில் எதுவும் ''ஆயிரம் ஆண்டுகள்'' என்பதை நேரடியான அர்த்தத்தில் நாள்காட்டி ரீதியான ஆயிரம் ஆண்டுகளைக் குறிப்பதில்லை. [4]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "நன்கு தொடங்கப்பட்ட விஷயம் பாதி முடிந்ததாக உள்ளது" என்ற பாடத்தில், ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சிக்கு முன்பே கிறிஸ்துவின் வருகை இருக்கும் என்ற கொள்கைக்காரர்களின் நம்பிக்கைகள் பற்றிய அதிக விபரமான கண்ணோக்கைக் காணவும். [5]ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சிக்கு முன்னதாகக் கர்த்தருடைய வருகை இருக்கும் என்ற கொள்கையுடையவர்கள் (விசேஷமாக "சபைப் பிதாக்கள்'' என்று அழைக்கப்படுபவர்களில் சிலர்) இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்பவர்களைப் பட்டியலிட விரும்புகின்றனர், இது அவர்கள் யாவரும் நவீனகாலத்தில் இந்தக் கொள்கை போதிப்பதைப் பரிந்துரைப்பதுபோல் காணப்படுகிறது. தொடக்ககாலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களில் சிலர், உலகப்பிரகாரமான மேசியா என்ற, மேற்கொள்ளும் தன்மைகொண்ட யூதத்துவத்தின் தவறான கருத்தினுடைய செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தனர் என்பது உண்மையே. ஆயினும் அவர்கள்,*

*நவீனகாலத்தின் ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்பு கிறிஸ்துவின் வருகை இருக்கும் என்ற கொள்கைக்காரர்களின் இயல்புக்கு மாறான கண்ணோட்டங் களைப் போதித்து இருப்பார்கள் என்பது உண்மையல்ல. இந்தப்பாடக்கருத்துப் பற்றிய சுருக்கமான ஆய்வுகள் பின்வரும் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன:* William Barclay, *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 190-91, and in R. C. H. Lenski, *The Interpretation of St. John's Revelation* (Minneapolis, Minn.: Augsburg Publishing House, 1963), 570. [6]*"யுகத்துவ" என்ற வார்த்தையானது, கிறிஸ்துவின் மரணம் மற்றும் அவரது இரண்டாம் வருகை ஆகியவற்றிற்கு இடையில் உள்ள காலம், "யுகங்களாக" - தேவன் மனிதகுலத்துடன் பல்வேறு வகைகளில் செயல்படும் மாறுபட்ட காலவேளைகளாக - பிரிக்கப்பட்டுள்ளது என்ற கோட்பாட்டைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக,* J. N. *டார்பி என்பவர், நடபடிகள் 2முதல் 7வரையுள்ள பகுதியை, கிறிஸ்துவத்தின் "யூதத்துவ காலம்" (சட்டத்துவத்தின் காலம்) என்றும் நடபடிகள் 8ம் அதன் பின்பு வரும் பகுதிகளும் "புறஜாதியாரின் காலம்" (கிருபையின் காலம்) என்றும் போதித்தார். யுகத்துவரீதியான ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள், நாம் இப்போது "சபை யுகத்தில்" இருக்கின்ற வேளையில், ஆயிரம் - ஆண்டு அரசாட்சி என்பது (இனிவரும்) "இராஜ்ய யுகமாக" இருக்கும் என்று கூறுகின்றனர். இவைபோன்ற கோட்பாடுகள் "தேவன் பட்சபாத முள்ளவரல்ல" (நடபடிகள் 10:34) என்ற அடிப்படைக் கருத்தை மீறுகின்றன. இந்தக் "கடைசி நாட்களில்" (நடபடிகள் 2:17; எபிரெயர் 1:2), தேவன் சிலருக்கு ஒரு ஏற்பாட்டையும் மற்றவர்களுக்கு அதிலிருந்து மாறுபட்ட மற்றொரு ஏற்பாட்டையும் கொண்டிருப்பது இல்லை.* [7]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "நன்கு தொடங்கப்பட்ட விஷயம் பாதி முடிந்ததாக உள்ளது" என்ற பாடத்தில் உள்ள குறிப்புகளைக் காணவும்.* [8]Ibid. [9]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 251. [10]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 203.

[11]*"சிங்காசனம்" ("அரியணை") என்ற வார்த்தை, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் நாற்பத்தி ஏழு முறைகள் காணப்படுகிறது; சாத்தான் மற்றும் மிருகம் ஆகியவற்றின் அரியணைபற்றிய குறிப்புகள் தவிர, அரியணை அல்லது அரியணைகள் என்பவை எப்போதுமே பரலோகத்தில் மட்டுமே இருக்கின்றன.* [12]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 230-31. [13]*யூதா மற்றும் இஸ்ரவேல் நாடுகளை ஆண்ட அரசர்களின் நாள் வரிசை அட்டவணையொன்றை நீங்கள் தயாரிக்கும்போது, பல அரசர்களின் ஆளுகைக் காலம் ஒன்றின்மீது மற்றொன்று கவிந்திருப்பதை நீங்கள் காண்பீர்கள். எடுத்துக்காட்டாக, ஆகாஸ் என்பவர் தமது தந்தையான யோத்தானுடன் சுமார் பன்னிரெண்டு ஆண்டுகள் காலமும், மனாசே அனேகமாக எசேக்கியாவுடன் எட்டு அல்லது ஒன்பது ஆண்டுகளும் ஆளுகை செய்தனர். இப்படிப்பட்ட கூற்றுகள், இவர்கள் எவ்வளவு காலம் உடன் ஆட்சியாளர்களாய் இருந்தனர் என்று கூறுகின்றன, ஆனால் இவைகள் இவர்களின் தந்தையர்கள் எவ்வளவு காலம் ஆட்சி செய்தனர் என்று கூறுவதில்லை. இதைப் பற்றி மற்றொரு கலந்துரையாடல்* Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), *என்ற புத்தகத்தின் பக்கம் 303ல் காணப்படுகிறது.* [14]James M. Efird, *Revelation for Today* (Nashville: Abingdon Press, 1989), 118. [15]*ஃபிராங்க் பேக் என்பவர், யுகத்துவம் என்பது "மீட்பின் திட்டம் மற்றும் தேவனுடைய தொடக்க நோக்கம் ஆகியவற்றின் விரிவான மறுகட்டுமானத்தை" உள்ளடக்குகிறது என்று காண்பித்தார்* (*Revelation,* Part 2, The Living Word Series [Austin, Tex.: R. B.

Sweet Co., 1965], 48). இருப்பினும் இந்தப் பகுதியில் வெளிப்படுத்தின விசேஷம் 20 உடன் தொடர்புடைய நேர்மாறுகள் பற்றி மாத்திரம் நாம் அக்கறை கொள்ளுகின்றோம். [16]ஆங்கிலத்தில் infinitive என்பது (வழக்கமாக "to" என்ற வார்த்தையை முன்னதாகக் கொண்டுள்ள) வினைச்சொல்லாக உள்ளது, இது பெயர் உரிச்சொல்லாக, வினை உரிச்சொல்லாக அல்லது பெயர்ச்சொல்லாக செயலாற்றுகிறது. [17]இயேசு பாடுபட்ட பின்பு தமது பிதாவுடன் அரியணையில் அமரச்சென்றார் என்று போதிக்கும் மற்ற வசனப்பகுதிகளை நாம் குறிப்பிடமுடியும். எடுத்துக்காட்டாக, எபிரெயர் 12:2ஐக் காணவும். [18]ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்பு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும் என்ற கொள்கைக்காரர்களில் சிலர், இயேசுவின் தற்போதய ஆளுகை குறித்த வேதாகமரீதியான போதனை பற்றியும், இராஜ்யம் தற்போது உள்ளது என்ற உண்மை பற்றியும் அறிந்துள்ளனர், ஆகையால் அவர்கள், "சில கருத்தில், இயேசு இப்போது ஆளுகை செய்கின்றார்" என்று கூறுகின்றனர். சிலவேளைகளில் அவர்கள், தற்போதய இராஜ்யத்திற்கும் ("kingdom," சிறிய k) ஆயிரம் ஆண்டு "இராஜ்யத்திற்கும்" "Kingdom" (பெரிய K) இடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றனர். இப்படிப்பட்ட வித்தியாசங்கள் மனிதரால் ஏற்படுத்தப்பட்டவைகளாய் இருக்கின்றன, மற்றும் இவற்றிற்கு வேதவசன ஆதாரம் இல்லை. [19]பல எழுத்தாளர்கள், கர்த்தர் கற்பித்த ஜெபம் என்று கூறப்படும் ஜெபத்தின் வார்த்தைகளை நாம் இன்னமும் அப்படியே ஜெபிக்க வேண்டும் என்பதுபோன்று, அதில் உள்ள "உம்முடைய இராஜ்யம் வருவதாக" (மத்தேயு 6:10) என்ற வார்த்தைகளைக் குறிப்பிடுகின்றனர் - ஆனால் அந்த உணர்வுக்கருத்தானது, நடபடிகள் 2ல் இராஜ்யம் நிலைநாட்டப்படுவதற்கு முன்பு வெளிப்படுத்தப்பட்டது. இராஜ்யம் "சமீபித்திருக்கிறது" என்று இயேசு பிரசங்கித்திருந்தார், மற்றும் அந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்திற்காகத் தமது சீஷர்கள் ஜெபிக்கவேண்டும் என்று அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். அந்த வாக்குத்தத்தம், பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு சுவிசேஷ பிரசங்கத்தைப் பிரசங்கித்த பின்பு, ஏறக்குறைய மூவாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்றபோது நிறைவேற்றப்பட்டது. [20]"பெற்றுக்கொள்கிற" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை ஒரு நிகழ்கால முற்று வினைச்சொல்லாக உள்ளது, இது "பெறுகிற" என்று மொழிபெயர்க்கப்படவும் முடியும் (KJV மற்றும் தமிழ் வேதாகமங்களில் காணவும்). நிகழ்கால முற்றுவினைச் சொல்லானது, பிரதான வினைச்சொல் குறிக்கும் செயல் நடக்கும் அதே வேளையில் நடைபெறும் இன்னொரு செயலை குறிக்கிறது. (இவ்விஷயத்தில், "கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்" என்ற சொற்றொடரைக் கொண்டு மொழிபெயர்க்கப்பட்ட வினைச்சொல்லாகும்.) நாம் ஒரு இராஜ்யத்தைப் பெற்றுள்ளபடியால் நாம் நன்றியுணர்வைக் காண்பிக்க வேண்டும்.

[21]இப்போது இருக்கும் ஒரு இராஜ்யம் பற்றி நாம் பேசுகின்றபோது, சபையைப் பற்றி நாம் பேசுகின்றோம். மத்தேயு 16:18, 19 மற்றும் பிற வசனப்பகுதிகளில், "இராஜ்யம்" மற்றும் "சபை" என்ற சொற்றொடர்கள் ஒன்றிற்குப் பதில் இன்னொன்று என்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றன. "இராஜ்யம்" என்ற வார்த்தை, கர்த்தர் ஆளுகைசெய்கின்ற வட்டாரத்தை மாத்திரம் குறிப்பதாக உள்ளது. இந்த வட்டாரத்தின் பூமிக்குரிய விசேஷித்த வெளிப்பாடாக உள்ளது சபையாகும்; இதன் வானத்திற்குரிய வெளிப்பாடாக உள்ளது பரலோகமேயாகும். நாம் எதிர்காலத்தில் - நாம் பரலோகத்திற்குச் செல்லும்போது - இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வோம் என்பதில் கருத்து ஒன்றுள்ளது, ஆனால் கிறிஸ்து இப்போது தமது இராஜ்யத்தின்/சபையின் மீது ஆளுகை செய்கின்றார் என்று புதிய ஏற்பாடு தெளிவாக எடுத்துரைக்கிறது. [22]ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி

*கொள்கைக்காரர்களில் பலர், இரண்டுக்கும் மேற்பட்ட சரீர உயிர்த்தெழுதல்கள் இருக்கும் என்று போதிக்கின்றனர்: (1) இவற்றில் ஒன்று, விசுவாசிகளின் உயிர்த்தெழுதல், இது பரவசநிலையின் காலத்தில் நடைபெறும்; (2) இன்னொன்று, அந்தக் காலகட்டத்தில் விசுவாசிகளாகி மரித்தவர்கள் உயிர்த்தெழுதல், இது ஏழு ஆண்டுகள் "பரவசநிலை/உபத்திரவ" காலத்தின் முடிவில் நடைபெறும் (இது சிலவேளைகளில்* "gleaning" resurrection *"சேகரிக்கும்" உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகிறது); (3) ஆயிரம் ஆண்டு அரசாட்சியின் முடிவில், அந்த ஆயிரம் ஆண்டு அரசாட்சிக் காலத்தில் மனமாற்றப்பட்டு மரித்தவர்களின் உயிர்த்தெழுதல்; (4) சாத்தான் அக்கினிக்கடலில் தள்ளப்பட்ட பின்பு, துன்மார்க்கரின் உயிர்த்தெழுதல், சிலர் இந்தப் பட்டியலுடன் இன்னும் சிலவற்றைச் சேர்க்கின்றனர். ஒருசிலர், ஏழு உயிர்த்தெழுதல்கள் வரை இருக்கும் என்று போதிக்கின்றனர். [23]பொதுவான ஒரு உயிர்த்தெழுதலே இருக்கும் என்று இன்னும் பல வசனப்பகுதிகள் போதிக்கின்றன. எடுத்துக்காட்டாக, தானியேல் 12:2ஐக் காணவும். மரித்தோரின்* ["the"] *உயிர்த்தெழுதல் பற்றிப் பேசுகின்ற பின்வரும் வசனப்பகுதிகளைப் பற்றியும் நினைத்துப்பார்க்கவும்: மத்தேயு 22:31; நடபடிகள் 24;21; எபிரெயர் 6:2. பல உயிர்த்தெழுதல்கள் உண்டு என்ற பாடக்கருத்து, பல நியாயத்தீர்ப்பு உண்டு என்ற கருத்துடன் பிணைந்துள்ளது. பல நியாயத்தீர்ப்புகள் உண்டு என்பது பற்றிய கலந்துரையாடல் ஒன்றை இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் காணப்படும் "நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறியவேண்டிய ஐந்து உண்மைகள்" என்ற பாடத்தில் காணவும். [24]*Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 95. [25]Daniel Russell, *Preaching the Apocalypse* (New York: The Abingdon Press, 1935), 227. *[26]யூதர்கள், ஒரு உலகப்பிரகாரமான அரசர் வந்து, உலகப்பிரகாரமான சிங்காசனத்தில் அமர்ந்து, தங்கள் சார்பாக உலகப்பிரகாரமான யுத்தம் செய்வார் என்று எதிர்பார்த்திருந்தனர், இயேசு, ஆவிக்குரிய அரசராக "மாத்திரம்" இருந்தபடியால், அவரை அவர்கள் புறக்கணித்துச் சிலுவையில் அறைந்தனர். [27]*Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 469. *[28]இவைகள், யோவான் நாடு கடத்தப்பட்டிருந்தமைக்கும் (1:9). பலிபீடத்தின் கீழிருந்த ஆத்துமாக்கள் வேத சாட்சிகளாக மரித்தமைக்கும் (6:9) தரப்பட்ட அதே காரணங்களாக இருந்தன. "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும், "மனுஷ குமாரனுக்கு ஒப்பானவர்" என்ற பாடத்தில் 1:9க்கான குறிப்புகளைக் காணவும். [29]முதலாம் மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கும்படியும், அதன் முத்திரையை நெற்றிகளிலும் கைகளிலும் பெற்றுக்கொள்ளும்படியும், மக்களை இணங்கச் செய்தல் என்பதே இரண்டாம் மிருகத்தின் (கள்ளத்தீர்க்கதரிசியின்) நோக்கமாய் இருந்தது (13:15-17). கள்ளத்தீர்க்கதரிசியினால் இவ்விதமாக ஆதிக்கம் செலுத்தப்பட்ட மக்கள் "இளைப்பாறுதல் இல்லாத" நிலைக்குச் சென்றதே அவர்களின் முடிவாயிற்று (14:11), அதேவேளையில், அவனை எதிர்த்து நின்றவர்கள் இயேசுவுடன் ஆளுகை செய்வதை இறுதிநிலையாகப் பெற்றுக் கொண்டனர் (20:4). பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்களின் தனிச்சிறப்புப் பற்றி, "வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் காணப்படும் "மகா வஞ்சனையாளன்" என்ற பாடத்தில் 13:16-18க்கான விளக்கங்களைக் காணவும். [30]ஹென்ரிக்ஸென் என்பவர், "சிலவேளைகளில் 'ஆத்துமாக்கள்' என்ற சொற்றொடர் 'மக்கள்' என்று அர்த்தப்படுவது உண்மையே, உதாரணமாக, ஆதியாகமம் 46:27, ஆனால் அவ்விஷயத்தில் நீங்கள் 'ஆத்துமாக்கள்' என்ற சொற்றொடருக்கு பதிலாக 'மக்கள்' என்ற சொற்றொடரை இடமுடியும். இங்கு வெளிப்படுத்தின விசேஷம் 20ல் நீங்கள் அவ்வாறு செய்ய இயலாது!" என்று எழுதினார் (230).*

[31]6 மற்றும் 20 ஆகிய அதிகாரங்களில் உள்ள இருகுழுக்களையும் நாம் அனேகமாக ஒரே குழு என்றே காணவேண்டியவர்களாய் இருக்கின்றோம், மற்றும் 20ம் அதிகாரம் "எதுவரைக்கும்?" என்ற கேள்விக்கு ஒருபகுதி பதிலாக உள்ளது. [32]மூலவசனத்தில், இரண்டாம் பிரிவு/பகுதி "and such" (அல்லது "and those") என்ற வார்த்தைகளைக் கொண்டு தொடங்குகிறது. கிரேக்க வசனத்தின் அர்த்தத்தில் உள்ள சிறு வேறுபாட்டை, இரு குழுக்கள் கண்ணோக்கில் உள்ளன என்பதற்கு ஆதாரமாகக் கல்வியாளர்கள் சுட்டிக்காண்பிக்கின்றனர். [33]யாக்கோபு வேதசாட்சியாக மரணம் அடைந்தார் (நடபடிகள் 12:1, 2), அதே வேளையில் அவரது சகோதரரான யோவான், பத்மு தீவிற்கு நாடுகடத்தப்படுதல் "மாத்திரம்" நடந்தது (வெளிப்படுத்தின விசேஷம் 1:9) என்பது ஒரு விவரிப்பாக உள்ளது. இருந்தபோதிலும், இவ்விருவருமே இயேசுவின் (துன்புறுதல் என்ற) ஸ்நானத்தினால் முழுக்காட்டப்பட்டிருந்தனர் (மாற்கு 10:38, 39). கர்த்தரைப் பொறுத்தமட்டில், இவ்விரு தியாகங்களில் ஏதொன்றும் மற்றொன்றைவிடப் பெரியதாக இருந்ததில்லை. [34]Barclay, 192. [35]Ibid. Barclay summarized this thought from Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 262. [36]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார்" என்ற பாடத்தில் காணவும். [37]இது அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தமாய் இருந்தது; ஒருவேளை இது, அவர்கள் தங்களின் போதனைகள் மற்றும் எழுத்துக்கள் மூலமாக ''நியாயந்தீர்த்தனர்'' என்ற உண்மையுடன் உறவுபட்டிருக்கலாம். [38]இவர்கள் 2 பேதுரு 2:4ல் பேசப்பட்ட பாவம் செய்த தூதர்களாக இருக்கலாம். [39]நாம் கிறிஸ்துவின் ஆளுகையில் பங்கேற்பதைப் போன்று, அவரது நியாயத்தீர்ப்பிலும் பங்கேற்கின்றோம் என்பது இவ்வசனப்பகுதியைப் பற்றிய சாத்தியக்கூறுள்ள ஒரு வலியுறுத்தமாக உள்ளது - இதை நாம் தனிப்பட்ட முறையில் செய்வதில்லை, ஆனால் அவர் மூலமாகவே செய்கின்றோம். [40]பின்தொடருகிற நியாத்தீர்ப்புக் காட்சியில், ஒரே ஒரு நியாயாதிபதியே இருக்கின்றார் (20:11) அவரே சகல மனிதர்களின் முடிவையும் தீர்மானிக்கின்றார்.

[41]மூலவசனத்தில் "அவர்கள் உயிர்த்து" ["they lived"] (KJV, ASVயில் காணவும்) என்றுதான் உள்ளது. [42]வேதாகமச் சொற்றொடராக்கத்தில், சிங்காசனத்தில் "அமருதல்" என்பது ஆளுகை செய்தல் என்பதாக உள்ளது (மத்தேயு 22:44; 25:31). [43]"இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்" என்ற வாக்கியத்தில், "இதுவே" என்பது எதைக் குறிக்கிறது என்பது தெளிவாயிராதபடியால், இவ்வாக்கியம் குழப்பமானதாக உள்ளது. (இது [இதே வசனத்தில்] இதற்கு முந்திய வாக்கியத்தில் கூறப்பட்டுள்ளதைக் குறிப்பிடுவதாய் இருக்க முடியாது.) இதை நான், 4ம் வசனத்தில் உள்ள பின்வரும் வாக்கியத்தின் முடிவில் உள்ள சொற்றொடரைக் குறிப்பதாக எடுத்துக்கொள்கிறேன்: "அவர்கள் உயிர்த்து ... அரசாண்டார்கள்," இது நமது உயிர்த்தெழுதலை முன்னுருவகப்படுத்துகிற இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறிப்பதாகச் சிலர் நினைக்கின்றனர் ("முதற் பலன்கள்"; 1 கொரிந்தியர் 15:20). வெளிப்படுத்தின விசேஷத்திற்குக் கண்டிப்பான எதிர்காலவியல் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க விருப்பம் கொண்டுள்ளவர்கள், "முதலில் உயிர்த்தெழுதல்" என்பது கிறிஸ்தவத்தின் ஊழியம் வெற்றிபெற்றதை, குறிப்பாக ரோமபேரரசின்மீது கிறிஸ்தவம் வெற்றிபெற்றதைக் குறிப்பிடுகிறது என்று நம்புகின்றனர் என்பதையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். (இவர்கள் பொதுவாக, கிறிஸ்தவத்தைச் "சட்டபூர்வமான" மதமாக்கிய, கான்ஸ்டன்டைன் என்ற அரசனின் ஆணையைச் சுட்டிக்காண்பிக்கின்றனர்.) இவர்கள் 11ம் அதிகாரத்தின் இரண்டு சாட்சிகளுடைய உயிர்த்தெழுதல் என்பதை ஒரு இணைவாகத் தரவழைத்து,

*சாட்சிகளின் "உயிர்த்தெழுதல்" என்பது அவர்களின் ஊழியத்திற்கான காரணம் மரிக்கவில்லை என்று சுட்டிக்காண்பிக்கிறது என்று கருத்துத்தெரிவிக்கின்றனர். [44]எடுத்துக்காட்டாக, 4ம் வசனத்தில் யோவான், வேதசாட்சியாக மரித்தவர்களை மாத்திரம் கண்டிருந்தால், "மரணம் அடைந்த மற்றவர்கள்" என்பது "இயற்கையான" வழிகளில் மரணம் அடைந்திருந்த உண்மையுள்ள கிறிஸ்தவர்களைக் குறிப்பிடுவதாய் இருக்கக்கூடும். இது, "உயிர்வாழுதல்" என்பதை வேதசாட்சிகளாக மரித்திருந்தவர்கள்மீது (''ஆளுகைசெய்தல்'' மற்றும் ''நியாயந்தீர்த்தல்'' ஆகியவற்றுடன்) பொழியப்பட்டிருந்த ஒரு விசேஷித்த ஆசீர்வாதமாக்கியிருக்கும். இருப்பினும், இந்தப் பாடத்தில் வலியுறுத்தப்பட்டபடி, "உயிர்த்தல்" என்பது உண்மையுள்ள யாவருக்கும் இன்னும் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தமாய் உள்ளது. எனவே ''மரணம் அடைந்த மற்றவர்கள்'' என்பது கர்த்தருக்குப் புறம்பே மரித்தவர்கள் என்று புரிந்துகொள்ளுதல் இன்னும் மேன்மையானதாக உள்ளது. [45]சிலமொழிபெயர்ப்புகள்* "again" *என்ற வார்த்தையைக்கூடச் சேர்க்கின்றன, இது, இன்னும் அதிகம் குழப்புவதாக உள்ளது - ஆனால்* "again" *என்ற வார்த்தை, கிரேக்க வசனத்தில் காணப்படுவதில்லை.* KJV *வேதாகமத்தில், 5ம் வசனத்தில்* "lived not" *என்று சரியாக உள்ளது, ஆனால் அதில் துரதிர்ஷ்டவசமாக* "again" *என்ற வார்த்தை கூட்டப்பட்டுள்ளது. [46]இந்தப் பாடத்திற்கான குறிப்பு எண் 39ஐக் காணவும். [47]''மரணம் அடைந்த மற்றவர்கள்'' என்போர் "உயிர்த்தெழுவார்கள்" அல்லது "ஆயிரம் ஆண்டுகள்" நிறைவடையும்போது "உயிரடைவார்கள்" என்பதே 5ம் வசனத்தின் மறைவான கருத்தாக உள்ளது. கிறிஸ்து மறுபடியும் வரும்போது, துன்மார்க்கர் மரித்த நிலையில் இருந்து உயிர்ப்பிக்கப்படுவர். அவர்கள் நியாயந் தீர்க்கப்படும்படிக்குத் தேவனுக்கு முன்பாக நிற்பர், அதன்பின்பு "இரண்டாம் மரணத்தை" அடையும்படி நியாயந்தீர்க்கப்படுவர் (20:14). அவர்களின் "வாழ்வின்" காலம் - அது வாழ்வு என்று அழைக்கப்படத் தகுதியானதென்றால் - காலம் மிகவும் சுருக்கமானதாக இருக்கும். [48]நான் இதைப் பற்றி இன்னும் அதிகமாக அடுத்த பாடத்தில் கூறுவேன். [49]இந்தப் புத்தகத்தில் காணப்படும் "நியாயத்தீர்ப்பைப் பற்றி நீங்கள் அறிய வேண்டிய ஐந்து உண்மைகள்" என்ற பாடத்தில் காணவும். [50]நீங்கள் இந்த பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் எவ்வாறு கிறிஸ்தவர்களாக முடியும் என்பதை (மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:37, 38), தேவனுடைய பிள்ளையாயிருந்து தவறு செய்கின்றவர் அவரிடமாய் எவ்வாறு திரும்பமுடியும் என்பது பற்றியும் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16) அவர்களுக்கு கூறவும்.*

[51]Thomas F. Torrance, *The Apocalypse Today* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 132-41.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *20:1-3 மற்றும் 20:4-6 ஆகியவற்றிற்கு இடையில் காணப்படும் எதிர்மறை ஒப்பீடு என்ன? இந்தப் பாடத்தின்படி, 1முதல் 6 வரையுள்ள வசனங்களின் அடிப்படைச் செய்தி என்ன?*
2. "Millennium" *என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?* "Postmillennialism," "premillennialism" *மற்றும்* "amillennialism" *என்ற வார்த்தைகள் அர்த்தப்படுத்துவது என்ன? இந்தச்*

சொற்றொடர்களின் அர்த்தங்களை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காண்பிக்கவும்.

3. "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "நன்கு தொடங்கப்பட்ட விஷயம் பாதி முடிந்ததாக உள்ளது" என்ற பாடத்தில், ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்னதாகக் கர்த்தருடைய மறுவருகை இருக்கும் என்ற கொள்கைக்காரர்களில் பெரும்பான்மையானவர்களின் அடிப்படைபோதனைகள் என்ற வகையில் தரப்பட்டுள்ளவற்றை மறுகண்ணோட்டமிடவும். இந்த உபதேச நிலைப்பாட்டின் பொதுவான பலவீனம் என்ன?
4. இந்தப் பாடம், வெளிப்படுத்தின விசேஷம் 20ஐப் பொறுத்தமட்டில், ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்னதாகக் கர்த்தருடைய மறுவருகை இருக்கும் என்ற கொள்கைக்காரர்களின் குறிப்பிட்ட மூன்று பலவீனங்களைப் பட்டியலிடுகிறது. அவற்றில் முதலாவது பலவீனம் எது?
5. தரப்பட்டுள்ள இரண்டாவது பலவீனம் என்ன? வெளிப்படுத்தின விசேஷம் 20ல் கண்டறியப்படாதவைகளாக உள்ளதும் ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்னதாகக் கர்த்தருடைய மறுவருகை இருக்கும் என்ற கொள்கைக்காரர்களின் திறவுகோல் உபதேசங்களாகவும் உள்ளவற்றில் சிலவற்றைப் பட்டியலிடவும்.
6. ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்னதாக கர்த்தருடைய மறுவருகை இருக்கும் என்ற கொள்கையின் மூன்றாவது பலவீனமாக இப்பாடத்தில் தரப்பட்டுள்ளது என்ன? உருவக வசனப்பகுதிகளின் அடிப்படையில் அமைந்த கோட்பாடுகள், வேதவசனங்களின் எளிய பகுதிகளுக்கு நேரெதிராகும் வகையில் அமையும்போது, நாம் எதை ஏற்றுக்கொள்ள வேண்டும்?
7. கிறிஸ்து இப்போது ஆளுகை செய்கின்றார் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறதா?
8. கிறிஸ்துவின் இராஜ்யம் இப்போது நடப்பில் உள்ளதாகப் புதிய ஏற்பாடு போதிக்கிறதா?
9. பல சரீர உயிர்த்தெழுதல்கள் இருக்கும் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறதா?
10. வேதசாட்சிகளாக மரித்தவர்கள் (மற்றும் உண்மையுடன் இருந்து மரித்த மற்றவர்கள்) உயிர்த்து, ஆளுகை செய்து, நியாந்தீர்த்து, ஆசாரியர்களாக ஊழியம் செய்வார்கள் என்று வெளிப்படுத்தின விசேஷம் 20:4-6 வசனப்பகுதி போதிக்கிறது. இந்த வாக்குத்தத்தங்கள் வேதசாட்சிகளாக மரித்தவர்களுக்கு மட்டும் உரியவையா அல்லது இவைகள் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் நடைமுறைப்படுத்துகின்றனவா? பின்பு, இவ்வசனப்பகுதியில் வேதசாட்சிகளாக மரித்தவர்கள் இந்த ஆசீர்வாதங்களைக் கொண்டிருந்தனர் என்று வலியுறுத்தப்படுவது ஏன்?
11. "முதலாம் உயிர்த்தெழுதல்" என்ற சொற்றொடரின் அர்த்தம் மற்றும் தனிச்சிறப்பைப் பற்றிக் கலந்துரையாடவும்.

12. கிறிஸ்தவர்கள், எந்த விசேஷித்தக் கருத்தமைவில் இந்த உலகம் கொண்டிராத வாழ்வைக் கொண்டுள்ளனர்? எந்தப் பொதுவான கருத்தில் கிறிஸ்தவர்கள் ஆளுகை செய்கின்றனர்? எந்தப் பொதுவான கருத்தில் கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தை நியாயந்தீர்க்கின்றனர்?
13. 20:4-6 வசனப்பகுதியானது உங்கள் இருதயத்திற்கு எவ்வகையில் ஆறுதலைக் கொண்டு வரவேண்டும்?